சாதனைகளால் மக்கள் இதயத்தில் சரித்திரம் எழுதும் முதல்வர் தலைமையிலான கடந்த 3 ஆண்டுகால கழக ஆட்சியில் 1810 திருக்கோயில்களில் குடமுழுக்கு!

ரூ.970 கோடியில் -1014 திருக்கோயில்களில் 1240 திருப்பணிகள்!

சட்டப் பேரவையில் - இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் - அமைச்சர் பி.கே.சேகர் பாபு அறிவிப்பு!

சென்னை, ஜூன் 29 -

சட்டப் பேரவையில், இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சாதனைகளால் மக்கள் இதயத்தில் சரித்திரம் எழுதும் முதல்வர் தலைமையிலான கடந்த 3 ஆண்டுகால கழக ஆட்சியில் 1810 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது என்று, சட்டப் பேரவையில் - இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் - அமைச்சர் பி.கே. சேகர் பாபு பெருமிதத்துடன் தெரிவித்தார்.

சட்டப் பேரவையில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு பதிலுரை வருமாறு:

கோபாலபுரத்தை தேடி வந்த ராதாபுரமே! இறையாண்மையைக் காக்கும் உங்கள் பேராண்மைக்கு என் பிரியமான வணக்கம். 'நீதிக்கு சாட்சி கேட்கிறார்கள், நீதிதான் எனக்கு சாட்சி' என்று கூறிய சிந்தனைச் சுயம்பு தந்தைப் பெரியாரை வணங்குகிறேன். 'மனிதர்கள் மீது வைக்கின்ற ஆழமான அன்பே உண்மையான ஆன்மீகம்' என்று கூறிய பேரறிஞர் அண்ணாவை பெருமையுடன் வணங்குகிறேன். காற்றாண்டு கொண்டிருக்கும் பூமியில், கழனி முதல் கணினி வரை வளர்ச்சி கண்டு, காலம் உள்ள வரை கலைஞர் என்று போற்றப்படும் நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வர் அவர்கள், 'வேட்டி கட்டி அமர்ந்திருக்கும் வெள்ளைத் தமிழ்', முத்தமிழ் பெற்றடுத்த நான்காம் தமிழை வணங்குகிறேன்.

தலைமையேற்ற நாளிலிருந்து தனித்துவமான வெற்றிகளையே தந்து கொண்டிருக்கும் எங்கள் தலைவரே! ஒரு சீன மன்னன் 'வரலாற்று நூல்களை எரித்து விடுங்கள், என்னிடமிருந்தே வரலாற்றை எழுதுங்கள்' என்று கூறினான். மக்கள் 'வரலாறு எழுத்தில் அல்ல, எங்கள் இதயத்தில் இருக்கிறது' என்று சொன்னார்கள். அதுபோல, சரித்திர சாட்சியங்களை அழிப்பவர் மத்தியில், சாதனைகளால் மக்கள் இதயத்தில் சரித்திரம் எழுதும் எங்கள் முதல்வர் அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவர் ஆட்சியில்தான், எட்டுத்திக்கும் மணியோசை ஒலிக்கின்றது. தீப தூப ஆராதனைகள் தினசரி நடக்கின்றன. தேவாரமும் திருவாசகமும் பண்ணிசையால் நிறைகின்றன. பக்தர்கள் மனமெல்லாம் இறையருள் குளிர்கிறது. எங்கள் ஆருயிர்த் தலைவருக்கு மீண்டும் ஒரு வணக்கம்.

நாம் கொடுத்து வைத்தவர்கள், உதயத்தை எல்லோரும் அண்ணாந்து பார்ப்பார்கள், ஆகாயத்தில் பார்ப்பார்கள். ஆனால், நம் மக்கள், உதயத்தை அருகிலேயே பார்க்கிறார்கள். 'இலக்கை அடைய முயற்சி செய், வாழ்க்கை அர்த்தமாகும்' என்று கூறியவர் இளைய அரிஸ்டாட்டில் எங்கள் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். 'எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கிட புலியென செயல் செய்யப் புறப்படு' என்று கூறிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் வரிகளுக்கேற்ப இலட்சோபலட்ச இளைஞர்களை இணைக்கும் நம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் அன்பு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நில மீட்பு - சிலை மீட்பு!

இந்த ஆட்சியில், 'நில மீட்பு, சிலை மீட்பு' என்பது ஒரு மிகப்பெரிய சாதனை. அடுத்தவன் சொத்தை அபகரித்தால் ஆண்டவன் தான் கேட்க வேண்டும். ஆண்டவன் சொத்தை அபகரித்தால், இன்று தமிழ்நாட்டை ஆளுகின்ற நம் ஆண்டவர்தான் கேட்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், திராவிடமாடல் ஆட்சியில் இதுவரையில் 6,004 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. இதற்கு முந்தைய 10 ஆண்டு கால ஆட்சியில் மீட்கப்பட்ட சொத்துக்களினுடைய தொகை ரூ.3,800 கோடி. இந்த மூன்று ஆண்டுகளில் தெய்வங்களாக இருக்கின்ற சிலைகள், கலைப்பொருட்கள் மொத்தம் 420 இனங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. சிலைகளுக்கு பாதுகாப்பு அறைகள் கட்டி பாதுகாக்கப்படுகின்றன. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு நடைபெறும் திருப்பணிகள் இதிகாச காலத்திற்கு இணையானது. வரலாற்றுப் பக்கங்களில் இடம்பெறுகிற அளவிற்கு, இதுவரையில் 8,962 திருக்கோயில் திருப்பணிகளுக்கு அனுமதி வழங்கியிருக்கின்ற ஆட்சி, இந்த ஆட்சி.

இந்த 8,962 திருக்கோயில்களில் மொத்தம் 20,200 திருப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த 20,200 பணிகளில், இதுவரையில் 7,648 பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கு ஒட்டுமொத்த செலவு மதிப்பீட்டுத் தொகை 5,097 கோடி ரூபாய் ஆகும். இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு இவ்வளவு பெருந்தொகை, இத்தனை திருக்கோயில்களுக்கு ஒதுக்கீடு செய்தது முதன்முறை. எங்கள் முதல்வரின் காலம் பக்தர்களின் நற்காலம். ஆம், கடந்த மூன்று ஆண்டுகளில் 1,810 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றது.

ஒரு ராஜகோபுரம் கட்டுவதையே அதிசயமாகப் பார்த்த காலங்கள் உண்டு; இந்த ஆட்சியில் 35 ராஜகோபுரங்கள் கட்டும் பெருமை திராவிட மன்னன் எங்கள் முதல்வருக்கே உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

கோபுரக் கலசங்களின்மீது புனிதநீர் விழ, விழ, மதவாத அரசியல் வேரோடும், வேரடி மண்ணோடும் தமிழகத்தில் வீழ்த்தப்படுகிறது.

ரூ.54.10 கோடியில் 70 திருக்கோயில்களில் புதிய அன்னதானக் கூடங்கள்!

நந்தனாருக்குக் காட்சி தர சிவன் நந்தியை விலக்கியது ஒரு காலம்; நந்தனாருக்குக் காட்சி தர சிவன் நந்தியை விலக்கியது ஒரு காலம்; நந்தனார்களை கருவறைக்குள் அழைத்துச் செல்ல வைத்த காலம் நம் தமிழக முதல்வர் அவர்களுடைய காலம். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளிலே இருக்கின்ற திருக்கோயில் திருப்பணிகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்று வழங்கப்பட்ட தொகையை, யாரும் கோரிக்கை வைக்காத நிலையில், இரண்டரை இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்தவர் நம்முடைய முதல்வர் அவர்கள்.

ரூ.11.50 கோடியில் நான்கு திருக்கோயில்களில் புதிய வெள்ளித்தேர்கள்!

ஓர் அமைதிப் புரட்சி நிகழ்ந்து என்பார்கள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளிலுள்ள 7,500 திருக்கோயில்களுக்கு, அவருடைய திருக்கரங்களாலேயே நிதியுதவிகள் வழங்கி, அந்த 7,500 திருக்கோயில்களும் புனரமைக்கப்படு கின்ற ஓர் அமைதிப் புரட்சியை நிகழ்த்திக் காட்டிக் கொண்டிருப்பவர் நம்முடைய முதல்வர் அவர்கள் என்பதை இங்கே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். இராமனுஜர் உயர்த்திய சமத்துவக் கொடி, வள்ளலார் உயர்த்திய சமரச சன்மார்க்கக் கொடி, இந்த இரண்டையும் உயர்த்திப் பிடிக்கிறது எங்கள் முதல்வர் அரசின் இரு வர்ணக்கொடி. (மேசையைத் தட்டும் ஒலி)

நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டம் 5 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும்!

ஆயிரம் ஆண்டு திருப்பணி!

இங்கு பேசிய பல சட்டமன்ற உறுப்பினர்கள் அதுபற்றி எடுத்துக் சொன்னார்கள்; திருப்பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டார்கள். ஆம்; கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய தமிழைப்போல் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட, புல், புதர் மண்டிக்கிடந்த திருக்கோயில்களில் திருப்பணி நடைபெற ஒரு நூறல்ல, ஆண்டிற்கு நூறு கோடி, நூறு கோடி, நூறு கோடி என்று முந்நூறு கோடி ரூபாயை வாரி வழங்கிய வள்ளல் நமது தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முந்நூறு கோடி ரூபாயோடு உபயதாரர்கள் வழங்கிய 83 கோடி ரூபாயும் சேர்ந்துகொண்டது. இந்த 383 கோடி ரூபாயில், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட 274 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. சொல்வதை செய்கின்ற அரசு என்பதற்கு எடுத்துக்காட்டாக, எடுத்துக்கொள்ளப்பட்ட திருக்கோயில்களுள் 23 திருக்கோயில்களில் குடமுழுக்கு நிறைவு பெற்றிருக்கிறது. நம் முப்பாட்டன் காலத்தில் கட்டப்பட்ட திருக்கோயில்கள் முழுமையாக எங்கள் முதல்வர் அவர்களால் புனரமைக்கப்படுகின்றன.

ஒரு கால பூஜைத் திட்டம்!

இதுவொரு வரலாறு; கார் உள்ளளவு, கடல் நீர் உள்ளளவு, எங்கள் முதலமைச்சர் அவர்களின் திருப்பெயர் ஒருகால பூஜைத் திட்டத்தில் கல்வெட்டுகளாகப் பதிக்கப்படும் என்பதில் எந்தவொரு மாறுபட்ட

கருத்தும் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) 17,000 திருக்கோயில்களுக்கு 1 இலட்சம் ரூபாய் என்றிருந்த வைப்பு நிதித் தொகையை 2 இலட்சம் ரூபாயாக உயர்த்திக் காட்டினார். அந்தத் திருக்கோயில்களுக்கு மைய நிதி உருவாக்கி, அனைத்துத் திருக்கோயில்களுக்கும் கட்டணமில்லா மின்சார வசதியை ஏற்படுத்தித் தந்தார். அந்தத் திருக்கோயில்களில் பணிபுரிகின்ற அர்ச்சகர்களுக்கு இதுவரையிலும் எந்தவிதமான ஊக்கத் தொகையும் வழங்கப்படவில்லை. அந்த 17,000 திருக்கோயில்களில் பணியாற்றுகின்ற அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாயை அவர்களுடைய வங்கிக் கணக்குகளில் செலுத்துவதற்கு ஆணையிட்டிருக்கின்றார்கள். இதோடுமட்டுமல்ல, அந்த ஒரு கால பூஜைத் திட்டத்திலுள்ள திருக்கோயில்களில் பணிபுரிகின்ற அர்ச்சகர்களின் பிள்ளைகளுக்கு ஓராண்டிற்கு 500 நபர்களுக்கு ரூ.10,000/- வீதம் கல்வி நிதி வழங்கி 'கல்விக் கண் திறக்கின்ற முதல்வர்' ஆக நம்முடைய முதல்வர் திகழ்கிறார் என்பதை இங்கே பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குமாத்திரம், முதல்வர் அவர்கள் இதுவரையிலும் வழங்கியிருக்கின்ற தொகை எவ்வளவு என்றால், 310 கோடி ரூபாயை அரசு மானியமாக வழங்கியிருக்கின்ற பெருமை நம்முடைய முதல்வர் அவர்களைச் சாரும். 1,000 ரூபாய் மகிழ்ச்சி ஒருபுறம்:

நாள் முழுவதும் அன்னதானம்!

'தானங்களில் சிறந்த தானம் அன்னதானம்' என்பார்கள். சட்டமன்ற உறுப்பினர் கார்த்திக் அவர்கள் பேசியபோது, முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 8 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்று கூறினார். இல்லை; 9 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்து, தமிழகத்தின் அட்சயப் பாத்திரமாகத் திகழ்பவர் தமிழக முதல்வர் என்பதை இங்கே பதிவு செய்கிறேன். அவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த திட்டத்திற்கு ஆகின்ற செலவு எவ்வளவு என்றால், 43 கோடி ரூபாயாகும். இத்திட்டத்தால் பயன் பெற்ற பக்தர்கள் எத்தனை பேர் என்றால், 1 கோடியே 24 இலட்சம் பேர்.

அதேபோன்று, பேரவைத் தலைவர் அவர்கள்கூட அன்னதானத் திட்டம் வேண்டுமென்று கேட்டார்கள். தற்போது தமிழகத்தில் 760 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதற்கு ஆகின்ற செலவு ஆண்டொன்றுக்கு 74 கோடி ரூபாய். இதில் பயன்பெறுகிற பக்தர்களின் எண்ணிக்கை, 2 கோடியே 11 இலட்சம் பக்தர்கள் இதில் பயனடைகிறார்கள். இந்த ஆண்டு இந்தத் திட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் விரிவுப்படுத்த உத்தரவிட்டிருக்கின்றார்கள். எங்கள் முதல்வரின் அன்னதான திட்டத்தால் இறைவனின் சன்னிதானங்களே இன்றைக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றன.

அர்ச்சகர் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் நலன். இறைப்பணியில் இருக்கின்ற அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இதுவரை இல்லாத அளவிற்கு திட்டங்கள் தருகின்ற நலத்திட்ட நாயகன் நம் முதல்வர் அவர்கள். தமிழர் திருநாளுக்கு புத்தாடை, ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ரூபாய் 1,000 கருணைக் கொடை, அதேபோல் ரூபாய் 2,000 என்றிருந்த ஓய்வூதியத்தை ரூபாய் 4,000 ஆக மாற்றி காட்டிய பெருமை, குடும்ப நல நிதி ரூபாய் 3 இலட்சம், கட்டணமில்லா மல் திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர் 47,000 பேர்களுக்கு முழு உடற்பரிசோதனை, 1,289 தற்காலிக பணியாளர்கள், முதல்வர் அவர்கள் ஆட்சி ஏற்பட்ட பிறகு, அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இது அர்ச்சகர் மற்றும் பணியாளர் நலன் காக்கும் திராவிட மாடல் ஆட்சி என்பதற்கு இத்திட்டங்களே ஒரு சாட்சி.

திருத்தேர்கள் திருவீதி உலா!

திருவிழாக்களின் கம்பீரம் திருத்தேர் என்பார்கள். அந்தத் திருத்தேர்கள் என்பது தங்கத் தேர்கள் 68 துறைக்கு இருக்கின்றன. வெள்ளித் தேர்கள் 55 துறையில் இருக்கின்றன. 1,097 மரத்தேர்கள் துறையின்கீழ் இருக்கின்றன. இந்த அனைத்து தேர்களையும் ஒருமுகப்படுத்தி, 41 மரத்தேர்கள் 8 கோடி ரூபாயில் புனரமைத்து, அனைத்து திருத்தேர்களை யும் திருவீதி உலா வர செய்தவர் நம்முடைய முதல்வர் அவர்கள்.

மன்னர்களின் ஆட்சியில் தேர்ப்படையை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். நம் முதல்வர் ஆட்சியில், தேர்கொடை. ஆம், திருவிழாக்களின் கம்பீரமே தேர்கள் தானே!

மேலும் ரூபாய் 43 கோடியில் தேவைப்படுகின்ற சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையையேற்று, சுமார் 74 புதிய மரத்தேர்களுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள், இந்த 74 மரத்தேர்களும் வீதி உலா வரும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக தேர்களுக்காக கோரிக்கை வைத்த உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மணமக்களில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருப்பின் 4 கிராம் தங்கத் தாலி உட்பட ரூ.60,000/- மதிப்பில் சீர் வரிசைகள் வழங்கப்பட்டு திருக்கோயில் மண்டபங்களில் கட்டணமின்றி திருமணம் நடத்தப்படும்!

திருத்தேர்களை மாத்திரம் தமிழக முதல்வர் அவர்கள் கவனம் கொள்ளாமல், அந்தத் திருத்தேர்கள் பாதுகாப்பிற்காக ரூபாய் 20 கோடியை ஒதுக்கீடு செய்து, 124 திருத்தேர் பாதுகாப்புக் கொட்டகைகளை இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கின்றார். அதோடு மட்டுமல்லாமல், கேட்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைக்கேற்ப 3 புதிய தங்கத் தேர்கள், 5 புதிய வெள்ளித் தேர்கள் தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அறிவித்து, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த 5 வெள்ளித் தேர்களில், திருத்தணியினுடைய வெள்ளித் தேர் தற்போது திருவீதி உலா வந்துக்கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஆறோடும் மண்ணில் எங்கும் நீரோடும்
ஏரோடும் எங்கும் எங்கள் தேரோடும்"

என்றார் கவியரசு கண்ணதாசன் அவர்கள்.

அந்த வரிகளுக்கேற்ப தேரோட்டத்திற்கு உயிரோட்டம் தந்தவர் எங்களுடைய முதல்வர் என்பதை இங்கே பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருக்குளத் திருப்பணிகள். இவ்வாட்சியில், திருக்குளங்கள் நிறைகின்றன; தெப்ப திருவிழாக்கள் சிறப்பாக நடக்கின்றன; அந்த வகையில், 129 திருக்குளங்கள் ரூபாய் 81 கோடியில் சீரமைக்கப்படு கின்றன. புதிய திருக்குளங்கள் ரூபாய் 3 கோடியில் 4 உருவாக்கப்படுகின்றன. கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தொடங்கி, இன்றுவரை திருக்கோயில்களில் 1 இலட்சம் தல மரக்கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன. புதிய குளங்கள் வெட்டியும், குளங்களை சீரமைத்தும், மரக்கன்றுகள் நட்டும், இறைத்தலங்களுக்கு எழில் சேர்த்து, இமயமாய் உயர்ந்து நிற்கின்றார் எங்கள் முதல்வர் அவர்கள்.

இறைவனுக்கும் மண்டபங்கள் தேவைப்படுகின்றன. நம்முடைய இறை அன்பர்களுக்கும் மண்டபங்கள் தேவைப்படுகின்றன.

அந்த வகையில் பார்த்தால், வசந்த மண்டபம், வாகன மண்டபம், யாக சாலை மண்டபம், சஷ்டி மண்டபம், பிரகார மண்டபம், திருமண மண்டபம், அன்னதான மண்டபம், இளைப்பாறும் மண்டபம், விருந்து மண்டபம், பொங்கல் மண்டபம், முடிகாணிக்கை மண்டபம் என்ற இத்தனை வகையான மண்டபங்களுக்கு ரூபாய் 469 கோடி செலவில் 240 மண்டபங்களை தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்த உத்தரவிட்டிருக்கின்றார். இந்த மண்டபங்களால் தெய்வங்களுக்கும் மகிழ்ச்சி; பக்தர்களுக்கும் நெகிழ்ச்சி; இதுவே இவ்வாட்சியின் மலர்ச்சி.

அனைத்துலக முருகன் மாநாடு!

நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஆட்சியில், இந்து சமய அறநிலையத் துறையில் சாதனைகளை சொல்ல வேண்டுமென்றால் நூறு மணி நேரம் கூட போதாது. ஒரு சில சாதனைகளை ஒரு வரியாக இந்த அவையிலே நான் எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கின்றேன். அகரமாய் திகழும் முருகனுக்கு அனைத்துலக மாநாடு பெருமை தந்தார்; ஆன்மீக புரட்சியாளர் இராமானுஜர் வாழ்க்கை நூலாக்கம் பெருமை தந்தார்; இறையருட்சோதி வள்ளலாருக்கு முப்பெரும் விழா பெருமை தந்தார்;

தொடர்ச்சி 11 - ஆம் பக்கம்